©
GOVERNMENT OF TAMIL NADU
2015

**[Regd. No. TN/CCN/467/2012-14.**
**[R. Dis. No. 197/2009.**
**[Price: Re. 0.80 Paise.**

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**EXTRAORDINARY** PUBLISHED BY AUTHORITY

No. 231] CHENNAI, MONDAY, NOVEMBER 2, 2015
Aippasi 16, Manmadha, Thiruvalluvar Aandu–2046

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

### NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

### COLLECTORS AND LOCAL AUTHORITIES.

**மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளர், கரூர் மாவட்டம்.**

**கரூர் மாவட்டம், கரூர் ஊராட்சி ஒன்றியம், நெரூர் (வடக்கு) ஊராட்சி மன்றத் தலைவர் பதவி நீக்கம் பற்றிய மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளரின் அறிவிக்கை.**

*(ந.க.எண் அ2/1423/2013)*

**No. VI(2)/163(a)/2015.**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் **1994** பிரிவு **205** உட்பிரிவு **11–**ல் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் கிராம ஊராட்சிகளின் ஆய்வாளருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி கரூர் மாவட்டம், கரூர் ஊராட்சி ஒன்றியம், நெரூர் (வடக்கு) ஊராட்சி மன்றத் தலைவர் திரு. R. மணிவண்ணன் என்பவர் அரசாணை/ஊராட்சி விதிமுறைகளுக்கு முரணாக செயல்பட்டு ஊராட்சி நிதியில் நிதி இழப்பினை ஏற்படுத்தியதற்கு பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் அடிப்படையில் முறைகேடுகள் உறுதி செய்யப்பட்ட நிலையில் ஊராட்சி மன்றத் தலைவர் என்னும் அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி உரிய அனுமதியின்றி முறைகேடாக செலவினம் மேற்கொண்டதால் அரசுக்கு நிதி இழப்பு ஏற்படுத்திய கரூர் ஊராட்சி ஒன்றியம், நெரூர் (வடக்கு) ஊராட்சி மன்றத் தலைவர் திரு. R. மணிவண்ணன் என்பவரை நெரூர் (வடக்கு) ஊராட்சி மன்றத் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் **1994** பிரிவு **262(1)–**ன்கீழ் இந்த பதவி நீக்கம் குறித்த அறிவிப்பு ***தமிழ்நாடு சிறப்பு அரசிதழில்*** வெளியிடப்படும் நாள் முதல் அமுலுக்கு வரும்.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் **1994** பிரிவு **205** உட்பிரிவு **12–**ன்கீழ், இந்த பதவி நீக்க அறிவிக்கை சம்மந்தமாக அரசிற்கு மேல்முறையீடு ஏதேனும் செய்ய விரும்பினால் ***தமிழ்நாடு சிறப்பு அரசிதழில்*** பதவி நீக்கம் குறித்த அறிவிக்கை வெளியிடப்படும் நாளிலிருந்து **60** நாட்களுக்குள் மேல்முறையீடு செய்யலாம்.

கரூர்,
**2015** அக்டோபர் **13.**

**ச. ஜெயந்தி,**
*மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்*
*ஊராட்சிகளின் ஆய்வாளர்.*

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU

DTP—VI-2 Ex. (231)